உ

சிவமயம்



யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதி
வடதுன்னையம்பதி வாசரும்,
உயர்தவச் சைவ வேளாண் குலத்தினருமாகிய

திருமதி

# சண்முகநாதன் சரஸ்ஈஸ்வரி

(ஈஷா) அவர்களது

# அமரத்துவ நினைவிதழ்

தோற்றம்: 1949. 11. 27 மறைவு: 1998. 08. 26

### திதி நிர்ணய வெண்பா

மண்ணும் வெகுதானிய வருடம் மாண்புமிகு
ஆவணி பூர்வபக்க பஞ்சமியில் — மின்னுபுகழ்
உத்தமியாள் சரஸ்ஈஸ்வரி உயர்கயிலை வெற்பிலுறை
அத்தனடி சார்தினமே சாற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
 குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
 பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற் பாதமுங்
 காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
 மாநிலத்தே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
 அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
 புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
 செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
 எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
 நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
 வெள்ளமே மேருவில் வீரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சில தேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண் மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண் டெனும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பரந்தெழுந்த சமண் முதலாய் பரசமய இருள் நீங்கச்
சிரந்தழுவு சைவ நெறித் திருநீற்றின் ஒளி விளங்க
அரந்தை கெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரி பூங்கழல் போற்றி.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினி பாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## ஆழ்வார் பாடல்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தங் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வழிபடு தெய்வத் துதிப்பாடல்கள்

## கொட்டிக் குளிப்பான் பிள்ளையார்

தந்தைதாய் தானுலகம் என்னுமுயர் ஞான
தத்துவத்தை உலகினுக்கே நிலை நாட்டி
விந்தையுறு மாங்கனியைப் பெற்று நின்றே
விளங்கு கொட்டிக் குளிப்பான் விநாயகரே
சிந்தையெல்லாம் உன் நினைவே நிறைந்து
சீரடியே தவறாது போற்றி நின்றேன்
முந்தைவினைப் பயன் போக்கியாட் கொள்வாய்
மூஷிகவா கனனே நின்னடி போற்றி.

## வல்லிபுர ஆழ்வார்

நாராயணா எனும்நாமம் என்நாவில் மறவாது
ஆராதனை செய்தேன் அரிஓம்நமோ நமமென்றே
பேராயிரம் கூறிபெரிது முனை வேண்டிநின்றேன்
வாராதிடக் காத்துவை குந்தம் சேர்க்குதியே.

## குலதெய்வம் முனியப்பர்

செங்கண்ணுஞ் செஞ்சடையும் சீற்ற நோக்கும்
பொங்குவக் கிரதந்த வாயுங் கொண்டு
எங்கள்குலம் காத்து நிற்கும் முனியப்பாவே
தங்கு முந்தன் தாளினையே சரணமப்பா.

## பிறத்தி சங்கிலி காளிதேவி

ஊரினிலே உலவு பிணி நோய்களின்றி
ஊர் காவற் தெய்வமென விளங்குகின்ற
பார்புகழும் பிறத்தி சங்கிலி காளித்தாயே
பத்தியொடு நாளுமுனை வணங்கியே
ஆர்வமுடன் பொங்கலிட்டு மடையும் சாத்தி
அடியினையே பணிந்து நின்றேன் அம்மா எந்தன்
ஓராது செய்தவினை ஓட்டி யந்தன்
உயர்பாத நிழலிருந்து அருளு வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரலாபம்

### நாயகர் திரு. ச. சண்முகநாதன்

[கொச்சகம்]

பதிநானே தொழுதற்காம் பரமநிதி எனை நினைத்து
மதிப்பாகஎனை மகிழ்ந்த மரகதம் நீர் மறைதறுவாய்
வதிமனையில் படுத்திருந்து மறை தற்கும் அளப்பிலதாய்
கதிகலங்கி எனையிங்கு கலங்க விட்டு மறைந்தனையோ:

### புத்திரி செல்வி ச. அனுஷா

பிள்ளையமு தெனவாகப் பெரும்பாசம் விளைந்ததம்மா
கொள்ளிவைத்துக் கடமுடைக்கும் கொடும்பொழுது வரலாச்சே
கொள்ளையின்பம் விளைத்தாய்க்குக் கொடுப்பபொருள் வாய்க்கரிசி
உள்ளமெல்லாம் கலங்கி நின்றேன் உனதாவி மறைந்ததென்ன.

### உடன்பிறந்த சகோதர சகோதரிகள்

பொன்பெறலாம் பொருள்பெறலாம் போதும் மட்டும்
புகழ்பெறலாம் பூதலத்தில் ஒரு வயிற்றில்
ஒன்றாகப் பிறந்திங்கே உலவி நின்ற
உடன் பிறப்பை இழந்திட்டால் — மீண்டொருகால்
என்றேனும் பெறலாமோ — எம் சகோதரியே
என்றென்றும் எமைநாடி — ஓடி வந்து
நன்றாகக் கதைபேசி நலமே கேட்பாய்
யமன் வந்தான் இடையினிலே என்செய்வோமே.

### உடன்பிறவாச் சகோதர சகோதரிகள்

அரும்பாசம் மிகவாக அகமகிழ்ந்த சகோதரியே
பெரும்பொழுது பிரிந்திருப்போம் பெயர்ந்துவந்து விழிக்கவில்லை
தருமத்தின் மணிகளுக்குச் சதாபொழுதும் வழங்குவையே
இருந்தமனை வெளியாச்சே எமைப்பிரிந்த தினமுதலாய்.

### மைத்துனர் மைத்துனிமார்

கண்டுவிட்டால் வாங்கவென்று அன்போடு கூவிக்கண் சிரிக்க
கொண்டவொரு பாசமுடன் குலவுசுக நலன்கள்கேட்டு
அண்டியிருந் தாதரித்த மைத்துனியே ஆவிபிரிந்த
மண்டுதுயர் மாறாது மனக்கவலை தீர்வதெப்போ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள்

பெற்றவொரு தாயெனவே பேரன்பு பூண்டு
 பிணைந்திருந்த பெறாத் தாயார் மாண்டசேதி
மற்றுமொரு துயர்க்கடலில் மூழ்க வைத்தே
 கதறியழு தேங்கு கின்றோம் பாவியாமே
குற்றமெது புரிந்தாலும் கண்டிப் போடு
 கூறுமதி லதனை யினியாரே சொல்வார்
பற்றியெரி நெருப்பினிலே உடலம் நீறாய்ப்
 பரவியதைக் காணவிதி வைத்தா யந்தோ!

## மறுமருமக்கள்

அன்புசொரி கின்றமுகம் ஆசைப் பேச்சு
 ஆதரிக்கும் தாயெனவே திகழ்ந்த மாமி
இன்பமுடன் இன்சொல்லைச் சிரித்துச் சிரித்து
 எடுத்துரைக்கும் வார்த்தைகளை என்று கேட்போம்
துன்பமிதை தந்து மறைந்திட்ட தேனோ?
 துயர் மேவத் துடிக்கின்றோம் துவளுகின்றோம்
முன்பு புரிந்திட்ட தவக்குறைவோ இந்த
 மோசமிங்கு வந்ததுவே மாமி அந்தோ.

## சுற்றஞ்சூழல்


மனைதேடி வந்துவிட்டால் மலர்ந்தவொரு வதனமொடு
 மனந்திறந்து பேசியெமை மகிழ்வோடு உபசரித்து
சினமின்றிச் சிரிப்போடு சிறந்தபுத்தி மதிகூறி
 சீலமொடு பண்பூட்டிச் சீருதவி நல்கிநின்று
மனமொன்றிப் பழகுமயில் மாதரசி சரஸ்சுஸ்வரி
 மாண்டாளென் றறிந்திந்த மானிலமே அழுததம்மா
அணைந்ததுவே சோதியின்று அழிந்ததுவே அவருடலம்
 அவராத்மா சாந்தியுற அமலனடி போற்றுதுமே.

## தேற்றம்

ஆறிலுஞ் சாவேயன்றி நூறிலுஞ் சாவேயாகும்
மாறிடும் இந்தமாய வாழ்வினை மதித்திடாதீர்
கூறிடும் சரஸ்சுஸ்வரியும் கூடிய ஈசன்பாதம்
மீறிடும் துன்பமாற்றிப் பிரானடி போற்றுவீரே.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*அன்புடையீர்!*

எமது குடும்பத் தலைவி திருமதி சண்முகநாதன் சரஸ்ஈஸ்வரி அவர்களின் இறுதி ஈமைக்கிரியையின்போது வருகை தந்தவர்களுக்கும், உடனிருந்து உதவியோருக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் சகல உதவிகள் புரிந்தோருக்கும், இன்றைய அந்திய அஸ்திக்கிரியைகளின்போது சமூகம் அளித்தோருக்கும் எமது இதயங் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இவ்வண்ணம்
திரு. ச. சண்முகநாதன் (கணவர்)
(கட். நெ. ப. நோ. கூ. சங்கம்)
செல்வி ச. அனுஷா (மகள்)
(யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பருத்தித்துறை ஆண்டு 11 மாணவி)

துன்னாலை மத்தி,
துன்னாலை.
24. 09. 1998.

தமிழ்ப்பூங்கா அச்சகம் - நெல்லியடி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org